28

இப்போது நேரமில்லை

பீடரிடம் இப்படிச் சொல்லிவிட்டு மேஃப்ளவர் கட்டிடத்தை விட்டு அவசரமாக வெளியேறினேன். வெளிக் கதவைத் திறந்து வெட்ட வெளிக்கு வந்தவுடன்தான் என் கையுறைகளை பீடர் அறையிலேயே மறந்து விட்டு வந்தது தெரிந்தது. அமெரிக்கக் குளிர்காலத்துக் குளிரைக் கையுறைகள் இல்லாமல் சமாளிக்க முடியாது.

பொதுவாக அயோவாசிடியில் நான் மறதிக்கு இடம் கொடுத்ததில்லை. எங்குமே மறுமுறை போவோம் என்ற எதிர் பார்ப்பே இருக்க முடியாது. எல்லாமே வாழ்விலே ஒருமுறை. எதையாவது மறந்துவிட்டு வந்தால் அதை இழந்துவிட்ட மாதிரி தான். நல்லவேளை, பீடர் அறைக்கு நான் மீண்டும் செல்லலாம். அதில் ஒரு சிரமம், பீடர் பேசுவான். பேசிக் கொண்டே யிருப்பான்.

பீடரை மனதிற்குள் ஒருமுறை வைதுவிட்டு, கைகள் இரண்டையும் என் பெரிய கம்பளி ஓவர் கோட்டின் பைகளுக்குள் விட்டுக்கொண்டு பஸ் ஸ்டாப் நோக்கிச் சென்றேன். உறைபனி சற்றே நனைந்த பஞ்சுக் கொத்துகள் போல விழுந்து கொண்டி ருந்தன. என்னுடைய உள் பனியன், சட்டை, ஸ்வெட்டர், கோட், அதன் மீது மஃப்ளர் இவ்வளவுக்கும் மீது பெரிய கம்பளிக் கோட் அவ்வளவும் எம்மாத்திரம் என்று கேலி செய்வது போலக் குளிர் நிலவியது.

தலைக் குல்லாயை முகமெல்லாம் மூடிவிடும்படி இழுத்து விட்டுக்கொண்டு சாலையைக் கடந்தேன். நன்கு பழக்கப் பட்டவர்களைக் கூடச் சமயத்தில் உறைபனி காலை வாரிவிடுவதை அறிந்திருந்தேன். குதிகாலை நன்றாகப் பதிந்து நடந்து பஸ் ஸ்டாப்பை அடைந்தேன். சற்று நேரத்திற்குள் வந்த பஸ்ஸில் ஏறினேன். தூக்குக் கயிறு போலக் கழுத்தை அழுத்திப் பிடித்துக்

கொண்டிருந்த மஃப்ளரைச் சற்றுத் தளர்த்திக்கொண்டு அப்படியே கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். எட்டு மணி என்று காட்டியது. மூன்று மணி நேரத்துக்கு முன்பும் அதைத்தான் காட்டியிருந்தது.

முதல் காரியமாகக் கடிகாரத்தைக் கழற்றி வேகமாகக் குலுக்கினேன். ஆட்டோமாடிக் கடிகாரங்களுக்குச் சாவி கொடுக்கத் தேவையில்லை. ஆனால் அவை ஓடிக் கொண்டேயிருக்க ஒருவன் சர்க்கஸ் தெரிந்தவனாக இருக்க வேண்டியிருக்கிறது.

மணி பதினொன்றரை காட்டத் திருத்தி கடிகாரத்தை அணிந்து கொண்டேன். டிரைவர் பக்கத்தில் உண்டியல் பெட்டி போன்றிருந்ததில் சில்லறையைப் போட்டுவிட்டு ஞாபகமாக 'டிரான்ஸ்பர்' சீட்டு வாங்கிக் கொண்டேன். அயோவாசிடியில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல பஸ் மாற வேண்டுமானால் இந்த டிரான்ஸ்பர் சீட்டு உதவியுடன் மறுபடி கட்டணம் செலுத்தாமல் போகலாம்.

ஐந்தடி கூட உயரமில்லாத அந்தச் சீனப் பெண் 'ஓரியண்டல் ஸ்டோர்ஸ்' என்று ஒரு கடை வைத்திருந்தாள். என்ன என்று எனக்குத் தெரியாத உணவுப் பொருட்கள், என்ன பாஷை என்று தெரியாத வில்லைகள் ஒட்டி அவளுடைய கடையில் நிறைந்தி ருக்கும். எனக்குத் தேவைப்படும் உளுத்தம் பருப்பு அவள் கடையில்தான் கிடைக்கும்.

"உனக்கு என்னாயிற்று?" என்று என் உதடுகளைச் சுட்டிக் காட்டி அவள் கேட்டாள்.

எனக்கு முதலில் புரியவில்லை. அப்புறம் சொன்னேன். பனியால் உதட்டில் வெடிப்புகள்.

"உடனே கவனித்துக் கொள். இல்லாது போனால் மிகவும் சிரமப்படுவாய்" என்றாள்.

"என்ன என்று கவனித்துக் கொள்வது?"

அவள் மிகுந்த பரிதாபத்தோடு என்னைப் பார்த்தாள். இன்னொரு அறைக்குள் சென்று அங்கிருந்து ஒரு குப்பியை எடுத்து வந்தாள். "இந்தக் கிரீமைத் தடவிக் கொள்" என்றாள்.

நான் குப்பியை வாங்கி மூடியைத் திறந்தேன். அதில் வெண்ணெய் போலிருந்ததை விரல் நுனியால் சிறிது எடுத்து உதடு களில் தடவிக்கொண்டு குப்பியை மூடி அவளிடம் தந்தேன்.

"நீயே வைத்துக் கொள். உனக்கு நிறையவே தேவைப்படும். விலை ஒன்றும் இல்லை. நீ எடுத்துக் கொள்" என்றாள்.

"நான் வாங்கும் சல்லிக் காசுப் பருப்புக்கு இவ்வளவு பெரிய பரிசுப் பொருளா?"

"அப்படித்தான் நினைத்துக் கொள்ளேன்" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தாள்.

அவள் அமெரிக்கன் ஒருவனை மணந்து கொண்டிருந்தாள். அவன் ஆறரையடி உயரமுள்ள போலீஸ்காரன். நான் அவளிடம் அதிகம் பேச்சு வளர்க்காமல் குப்பியைப் பையில் போட்டுக் கொண்டேன். கடைக்கு வெளியே வந்து கடிகாரத்தைப் பார்த்தேன். பதினொன்றரை காட்டியது.

அதன் பிறகு ஒரு மணி நேரத்துக்கு நான் தெருவெல்லாம், பஸ்ஸிலெல்லாம் கையை வீசிக் குலுக்கிய வண்ணம் இருந்தேன். குழந்தைகள் விளையாட்டுக் கடிகாரம் போல அது முள்ளை எங்கு திருப்பி வைத்தாலும் அதே நேரத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. கடிகாரம் நின்றுவிட்டது.

எனக்குத் தெரிந்தவர்களை விசாரித்தேன். ஒருவருக்கும் கடி—யார ரிப்பேர் பற்றி யோசனை கூற முடியவில்லை. டெலிபோன் டைரக்டரியில் இரு கடைகள் குறித்திருந்தது. அவர்களிடம் டெலிபோனில் விசாரித்தேன். அவர்கள் நேரடியாக ரிப்பேர் செய்வதில்லை. கடிகாரத்தை வாங்கி சிகாகோ நகரத்துக்கு அனுப்புவார்கள். அதன் பிறகு எட்டு வாரத்துக்குப் பிறகு கடிகாரம் பற்றித் தகவல் கிடைக்கும். ஓடாத கடிகாரத்தைத் தூர எறிந்து விட்டுப் புதிது வாங்கிக் கொள்வதுதான் உண்மையிலேயே சிக்கனமானது.

புதுக் கடிகாரம். இந்த ஊரில் எனக்குத் தகுந்த புதுக்கடி காரம் எங்கு எப்படி வாங்குவது?

அயோவாசிடியில் ஓரிரு நகைக்கடை அலமாரிகளில் கடிகாரங்களைப் பார்த்திருக்கிறேன். அந்தக் கடைகளில் காலெடுத்து வைக்கக்கூட எனக்குத் துணிவு ஏற்பட்டதில்லை. மேலும் நகையும் நான் அதுவரை புதிதாக வாங்கியதில்லை.

திரும்பத் திரும்ப கே—மார்ட் கடைதான் மனதில் தோன்றியது. கடையின் பெயரிலேயே 'டிஸ்கவுண்ட்' என்ற பதம் சேர்ந் திருக்கும். மலிவு விலை. மலிவு சாமான்கள். மிகவும் விஸ்தாரமான கடை என்றாலும் பயமோ கூச்சமோ ஏற்படுத்தாது.

என் பண நிலையை நிதானமாகக் கணக்குப் பார்த்தேன். கொஞ்சம் இழுபறிதான். திடீரென்று புதுக் கடிகாரம் வாங்கி

அணிந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடையாது. ஆனால் இன்னும் இங்கு நான் இருக்க வேண்டிய காலத்தைக் கடிகாரம் இல்லாமல் சமாளித்துவிட முடியுமா?

அப்படியும் முயற்சி செய்து பார்த்தேன். ஒரு நாள் பஸ்ஸைத் தவறவிட்டேன். ஐந்து மணிக்கு ஒரு வீட்டிற்குப் போக வேண்டியதற்கு நான்கு மணிக்கே அங்கு போய்த் தெருவில் குளிரில் தடுமாறினேன். இதெல்லாம் கூடப் பரவாயில்லை. விடியற்காலை என்று எண்ணி நள்ளிரவில் எழுந்து காப்பி போட்டுக் குடித்துவிட்டேன். அடுத்த நாள் முழுதும் இந்த அகால காப்பியின் விளைவுகளால் அவதிப்பட்டேன். ஒருவன் ஒழுங்காக உயிர் தரித்து இருப்பதற்குப் பிராண வாயுவுக்கு அடுத்தபடி கடிகாரந்தான் என்று தோன்றியது. மீண்டும் கே—மார்ட் கடைக்குத்தான் போக வேண்டும்.

கே—மார்ட் கைகடிகாரப் பகுதியில் நான் திட்டமிட்டிருந்த பதினைந்து டாலர் விலையில் சில கடியாரங்கள் கேவலமாகக் கிடந்தன. ஒன்றையும் அதிலுள்ள சங்கிலி கொண்டு என் மணிக் கட்டில் கட்டிக் கொள்ள முடியாது. முழங்கை அருகில் வேண்டு மானால் அச்சங்கிலி பிடிப்பாகப் பொருத்திக் கொள்ளும். அந்தக் கடிகாரச் சங்கிலிகள் ஒரு சராசரி அமெரிக்கனின் உடல் வளர்ச்சிக்குப் பெருமைக்குரிய எடுத்துக்காட்டாக இருந்தன.

கடிகாரப் பிரிவுப் பெண்ணுக்கு வருத்தமாயிருந்தது. என் கைக்குப் பெண்கள் கடிகாரம் சரியாயிருக்கும். ஆனால் முப்பது டாலருக்கு குறைந்து நம்பகமான கடிகாரம் ஒன்றும் கிடையாது.

"உங்களுக்குக் கைகடிகாரந்தான் வேண்டுமா?" என்று அவள் கேட்டாள்.

"பையில் போட்டுக் கொள்ளும் கடிகாரம் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இந்த நாளில் அப்படிப்பட்ட கடிகாரங்களைத் தயார் செய்வதுகூடக் கிடையாது அல்லவா?"

"பேனா கடிகாரம் காட்டட்டுமா?"

இன்னொரு அலமாரிக்கு என்னை அழைத்துச் சென்று அவள் அந்தப் பேனா கடிகாரத்தை எடுத்துக் காட்டினாள். எனக்குப் புதுமையாக இருந்தது. ஒரு பக்கம் பேனா. மறுபக்கம் எண்களாக மணி காட்டும் கடிகாரம். மணி, நிமிடம் தனித்தனி எண்களாக. இரண்டுக்கும் நடுவில் இரு புள்ளிகள் கண் சிமிட்டியபடி கடிகாரம் உயிரோடு இருப்பதை நிரூபித்துக் கொண்டிருந்தன. கடிகாரப்

பேனாவில் சிறிய எழுத்தில் 'ஹாங்காங்கில் செய்யப்பட்டது' என்றிருந்து.

"எவ்வளவு?" என்று கேட்டேன்.

தேன் வந்து காதில் பாய்ந்தது.

"பதினைந்து டாலர்."

அவன் கடிகாரப் பேனாவுடன் ஒரு உத்திரவாதப் பத்திரம், கடிகாரத்தைத் திருத்தி வைக்கப் பயன்படுத்த வேண்டிய ஒரு கொக்கி, கடிகாரம் நின்று போய்விட்டால் நான் அதை அனுப்பக் கூடிய கடைகளின் முகவரிகள்—இதெல்லாம் கொண்ட அட்டைப் பெட்டியும் கொடுத்தாள். முதலில் பெட்டியில்தான் பேனாவை வைத்தேன். ஆனால் இதை வாங்கியதின் காரணமே கடிகாரத்துக் காகத்தானே என்று மூளையில் ஒரு பகுதி என்னைக் கிண்டல் செய்தது. உடனே கடிகாரப்பேனாவை என் கோட்டின் உள்பையில் போட்டேன். அட்டைப் பெட்டியை ஓவர் கோட் பையில் நுழைத்துக் கொண்டு கடையை விட்டு வெளியேறினேன்.

நான் கடைக்கு வந்தபோது ஓரளவு பகல்; வெளிச்சமிருந்தது. இப்போது இருட்டி விட்டது. கே—மார்ட் கடையின் பிரகாசமான விளக்குகளும் இருட்டை இன்னும் அதிகமாக்கிக் காட்டின. அந்தப் பகுதியில் கார்கள் போக்குவரத்துக்கூட அதிகம் கிடையாது.

குல்லாயை நன்றாக இழுத்துக் காதெல்லாம் மூடிக் கொண்டு நான் உறை பனி விழுந்து கிடந்த பாதையில் மெதுவாக நடந்து போனேன். அரை மணிக்கு ஒரு பஸ். அரை மணி கழித்து வந்தது. அதுவரையில் குளிரில் விரைத்துப் போகாமலிருப்பதற்காக நின்ற இடத்திலேயே காலை மாறி மாறித் தூக்கி உதைத்துக் கொண்டி ருந்தேன். பஸ்ஸில் ஏறி மிகுந்த சிரமத்தோடு பையிலிருந்து சில்லறை எடுத்து டிரைவர் பக்கத்திலிருந்த உண்டியலுக்குள் போட்டேன். டிரான்ஸ்பர் சீட்டு வாங்கிக் கொண்டேன். அந்த நேரத்தில் அவ்வளவு பெரிய பஸ்ஸில் ஒருவர்தான் பயணம் செய்து கொண்டிருந்தார். நாங்கள் ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் பாசத்துடனும் பார்த்துக் கொண்டோம்.

பெண்டகிரஸ்ட் என்னுமிடத்தில் நான் பஸ் மாறவேண்டும். இரண்டாம் பஸ்ஸில் நான் ஒருவன்தான் பயணம். நான் இறங்கிய பிறகு காலியாகத்தான் அது போகும்.

என் அறையையடைந்து தொப்பி, பெரிய கோட், ஜோடு எல்லாவற்றையும் கழற்றி எறிந்தேன். ஒரு கப் காப்பி குடிக்கலா

மென்று அடுப்பு மூட்டித் தண்ணீர் வைத்தேன். இப்போது நேரம் பார்க்கப் பேனா—கடிகாரத்திற்காகக் கோட்டின் உட்பையினுள் கைவிட்டேன். பை காலியாக இருந்தது.

அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டேயிருக்க நான் மீண்டும் என் ஜோடுகளைக் காலில் மாட்டிக் கொள்ளத் தொடங்கினேன். போயிற்று. போயிற்று. பதினைந்து டாலர் போயிற்று. அந்தப் பேனா கடிகாரத்தில் ஒருமுறை கூட நேரம் பார்க்கவில்லை. அதற்குள் தொலைத்தாகி விட்டது.

என் உடுப்பின் எல்லாப் பைகளையும் தேடிப் பார்த்து விட்டேன். கோட்டின் உட்புறப் பையில் வெறும் பேனா—கடிகார மாக வைத்தது நன்கு நினைவிருந்தாலும் கடைப்பெண் கொடுத்த அட்டைப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். என் ஓவர் கோட் பைகளில் தேடினேன். இல்லை. எங்கோ கீழேதான் விழுந்திருக்கிறது. இந்தக் குளிரிலும் இருட்டிலும் எப்படித் தேடுவது?

என்னைக் கொண்டு வந்த பஸ் அதனுடைய அன்றையக் கடைசிப் பயணத்திற்கு திரும்பிப் போய்க் கொண்டிருந்தது. நான் ஏறிக் கொண்டேன். டிக்கெட்டுக்காகச் சில்லறை போடாமல் நேராக நான் முன்பு உட்கார்ந்த இடத்திற்கு அடியில் தேடிப் பார்த்தேன். பஸ் டிரைவர் வண்டியைக் கிளப்பாமல் அப்படியே நிறுத்தி வைத்திருந்தான்.

"என் பேனா ஒன்று தொலைந்து விட்டது" என்று அவனிடமே சொன்னேன். அவன் பதிலேதும் சொல்லாமல் உண்டியல் பெட்டி யில் நான் பயணக்காசு போடுவதற்காகக் காத்திருந்தான். பஸ் மிகவும் சுத்தமாக இருந்தது.

பெண்டகிரஸ்ட் போயடைந்த போது அங்கிருந்து கே—மார்ட் திசை போகும் கடைசி பஸ் காத்திருந்தது. அதில் ஏறித் தரையில் தேடிப்பார்த்தேன். அதுவும் சுத்தமாக இருந்தது. சந்தேகமேயில்லை. கே—மார்ட்டிலிருந்து திரும்பி வரும்போது அரை மணி நேரம் அந்த பஸ் ஸ்டாப்பில் காலை உதைத்துக் கொண்டு காத்தி ருந்தபோதுதான் பேனா கடிகாரம் கீழே விழுந்திருக்கிறது.

முன் பஸ்ஸில் நான் டிரான்ஸ்பர் சீட்டு வாங்க மறந்திருந்த படியால் இன்னொரு முறை பஸ் கட்டணம் செலுத்தினேன். கே— மார்ட் பஸ் ஸ்டாப் வந்தவுடன் கீழேயிறங்கி அதற்கு எதிர்த் திசை பஸ் நிற்கும் பஸ் ஸ்டாப்புக்கு ஓடினேன். அந்த இடமெல்லாம் நிறைய உறைபனி விழுந்து கால் வைத்தபோது அரையடிக்கும் குறையாமல் புதைந்தது. இருட்டு. சகிக்க முடியாத குளிர். ஒரு

பயனுமில்லாமல் அழுத்தமாகப் பதினைந்து டாலர் இழந்த வருத்தம். ஓடாத கடிகாரத்தை ரிப்பேரும் செய்ய முடியாது; கடிகாரமும் இல்லை.

என் கையுறைகள் பாழாவதைக் கூடப் பொருட்படுத்தாமல் உறை பனியில் கையைவிட்டு நாலாபுறமும் துளாவிப் பார்த்தேன். இருட்டிலும் பனி கரைந்து மண்ணோடு சேர்ந்து சேறாவதை உணர முடிந்தது. பேனா கிடைக்கவில்லை.

நான் எழுந்து நின்றேன். அந்தக் குளிரிலும் என் கழுத்துப் பக்கத்தில் வியர்த்திருந்தது. தூரத்தில் கே—மார்ட் கடையின் விளக்குகள் தெரிந்தன. அயோவாசிடியின் விளக்குகள் இன்னொரு புறத்தில் வெகு தூரத்தில் மங்கலாகத் தெரிந்தன.

எனக்குப் பேனா கடிகாரம் தொலைந்து போன வருத்தத்தோடு ஒரு புதுக் கவலையும் பிடித்துக் கொண்டது. இந்த இருட்டிலும் குளிரிலும் எப்படி என் அறையைப் போய்ச் சேர்வது? இப்படி இருட்டில் தன்னந்தனியாக மாட்டிக் கொள்ளலாமா?

அமெரிக்காவில் எந்த ஊரிலுமே தனியாக, பாதசாரியாக, ஆறு மணிக்குப் பிறகு வெளியே செல்வது பைத்தியக்காரத்தனம் என்று ஒருவர் இல்லை ஒன்பது பேர் சொல்லியிருக்கிறார்கள்; அமெரிக்கர்களே சொல்லியிருக்கிறார்கள். பகல் வேளையில் ஜன நடமாட்டம் உள்ள சாலைகளில் அயோவாசிடியைப் போலச் சாதுவான இடம் உலகில் எங்குமே இருக்க முடியாது என்று தோன்றும். ஆனால் வழிப்பறி, கொலைக்கு இந்த கே—மார்ட் சுற்றுப்புறத்திற்கு இணையாக இன்னொரு இடம் அமைவது அவ்வளவு எளிதல்ல.

என் பைகளைத் தடவிப் பார்த்துக் கொண்டேன். பர்ஸ், பாஸ் போர்ட், ஒரு கைக்குட்டை, சில காகிதங்கள் இவைதான் இருந்தன. வழிப்பறிக்குப் பணம் இருந்தாலும் கஷ்டம், இல்லாது போனாலும் கஷ்டம். பர்ஸில் பணம் நிறைய இருந்தால் எல்லாம் போயிற்று. பணம் இல்லாது போனால் வழிப்பறிக்காரன் கோபத்தில் என்ன செய்வான் என்று சொல்ல முடியாது. பாஸ்போர்ட்டைக் கிழித்துப் போடலாம். சுண்டுவிரலை வெட்டித் தள்ளலாம். காதில் துளை போடுவது போலச் சுட்டுவிட்டுப் போகலாம்.

சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் வரை. எனக்கு உறை பனி கணுக்கால் வரை இருந்தது. கே—மார்ட்டிலிருந்து என் அறைக்குள்ள ஐந்து மைல் தூரத்தை ஐஸை விடக் குளிரும் வெட்ட வெளியில் கால் நடையில் கடக்கத் துவங்கியபோது என்னுடைய ஒரே சிந்தனையெல்லாம் அடுத்த அடி எடுத்து வைப்பதைத் தாண்டிச் செல்லவில்லை. அவ்வப்போது அறுபது மைல் வேகத்தில் கார் என்னைத் தாண்டிச் செல்லும். அல்லது எதிர்ப்புறமிருந்து என்னைக் கடந்து போகும். அதில் ஏதாவது ஒன்று நின்று அதிலிருந்து ஒருவன் என்னைத் தாக்க வரக்கூடும். அதே நேரத்தில் அந்தக் கார்களில் போகிறவர்களும் ஒரு பயங்கரக் கொலைகாரன், கொலை செய்துவிட்டோ அல்லது கொலை செய்யவோ பதுங்கிப் பதுங்கிப் போகிறான் என்று என்னைப் பற்றி நினைக்கக்கூடும்.

சிறிது சிறிதாக நான் என் தெருவை நெருங்கிக் கொண்டு வரும்போது என்னால் வேறு சில விஷயங்களைப் பற்றியும் யோசிக்க முடிந்தது. எவ்வளவோ பணம் தொலைந்து போயிருக்கிறது. எவ்வளவோ பொருட்கள் பறி போயிருக்கின்றன. பேனாவும் அவற்றோடு சேர்ந்து கொள்ளட்டும். இது பேனாவா? இல்லை. கடிகாரம். பேனா கடிகாரம். அல்லது கடிகாரப் பேனா. மிகவும் அழகாகத்தான் இருந்தது. ஒருமுறை அதை வைத்து எழுதவில்லை. ஒருமுறை நேரம் பார்க்கவில்லை. அதற்குள் தொலைந்து போய் விட்டது. எங்கோ உறைபனியில் விழுந்து கிடக்கும். அல்லது யாராவது தூக்கிப் போயிருக்கக்கூடும். அதை ஏன் நான் கோட்டின் உள்பையில் போட்டேன்? பேனா போலத் தான் கிளிப் இருந்ததே. சட்டைப் பையில் அல்லது கோட்டுப் பையில் குத்தி வைத்துக் கொண்டிருக்கக் கூடாது? ஏனோ கோட்டுப் பையினுள் என் கையை மீண்டும் விட்டுத் துழாவினேன். கோட்டு பழையது. உள் பையில் விரல் போகும் படியாக ஓட்டை விழுந்திருக்கிறது. வழவழவென்றிருந்த பேனா ஓட்டை வழியாகச் சந்தோஷமாக வழுக்கிக்கொண்டு விழுந்துவிட்டது. அறைக்குப் போனவுடன் கோட் உள்பையில் ஓட்டையைச் சரி செய்ய வேண்டும். ஓட்டை இருப்பது இப்போதுதான் தெரிகிறது. இதற்கு முன்னால் இன்னும் என்னென்ன விழுந்து தொலைந்திருக்கிறதோ?

என் அறையை இன்னும் நெருங்கி வரும் வேளையில் மூளை உற்சாகமாகக் கூட இருந்தது. ஒரு மணி நேரம் அதைக் கடுமையாக நடத்திக் கதறக் கதற அடித்தாயிற்று. நன்றாக அழுது ஓய்ந்த நிம்மதியை அது இப்போது அனுபவித்துக் கொண்டிருந்தது.

இப்போது எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. கோட்டுகளின் உள்பைகள் வெளியே தெரிவதில்லை. பை இருக்கும் இடமே ஒரு

நீளக் கீறல் மூலம்தான் தெரியும். அதாவது கோட்டுக்கு உட்புறம் லைனிங் என இருக்கும் துணிக்குள் இந்தப் பை இருக்கும்.

எனக்குச் சற்றுப் பரபரத்தது. லைனிங் துணிக்குள் கோட்டின் உள்பை இருந்தால் பேனா கடிகாரம் கோட்டுக்கு வெளியே விழுந்திருக்க நியாயமில்லை. பையில் என்ன ஓட்டை இருந்தாலும் விழுந்த பொருள்கள் லைனிங் துணிக்குள்ளேயே சிறைப்பட்டிருக்க வேண்டும்.

குளிரைப் பாராட்டாமல் அவசரம் அவசரமாக ஓவர் கோட் பொத்தான்களை விலக்கி என் கோட்டின் பொத்தான்களையும் நெகிழ்த்தினேன். கோட்டின் அடிபுறம் தடவிப் பார்த்தேன். பேனா கடிகாரம் ஓரிடத்தில் சிக்கிக் கொண்டிருந்தது.

1985